# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2157/43 - 2020 ජනවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.09

*2157/43 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல. : பீஎஸ்/சீஎஸ்ஏ/00/1/14/10*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ

1. மாண்புமிகு கே.ரி. சித்திரசிறி அவர்கள்
   ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி

2. திரு.சுஹத கம்லத் அவர்கள்
   ஓய்வுபெற்ற சொலிசிட்டர் ஜெனரால்

3. திரு.டி.எம்.குணசேகர அவர்கள்
   சிரேட்ட வங்கியாளர்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள் !


1A - G 31484 — 387 (2020/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இழைக்கப்பட்ட பிழையான செயல்கள், ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகள் ஆகியன எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளனவாதலாலும்;

இக்கட்டளையின் கீழ் சொல்லப்பட்ட விடயங்கள் மீதான விசாரணையின் பரப்பெல்லையானது, தமது நியதிச்சட்ட ரீதியானதும், சட்டரீதியானதுமான பொறுப்புக்களை ஆற்றும் (இதனகத்துப் பின்னர் "the CBSL" என்று குறிப்பிடப்படும்) இலங்கை மத்திய வங்கி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகள்மீது எவ்விதத்திலும் ஒரு தடையினை ஏற்படுத்தாது என்பதை அவதானித்தும், இக்கட்டளைக்கமைவாக நடத்தப்படும் விசாரணை இருப்பினும், பொருத்தமான எழுதப்பட்ட சட்டங்களுக்கமைவாக இயலுமான நடவடிக்கையைப் பரிசீலிப்பதற்கும் முடியுமானவிடத்து பின்பற்றுவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது என்பதைக் கருத்திற்கொண்டும்;

இக்கட்டளையின் கீழான புலனாய்வும் விசாரணையும் இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட உரிய அதிகாரிகளினால் தமது நியதிச்சட்டரீதியானதும் சட்டரீதியானதுமான பொறுப்புக்களை மேற்கூறிய வகையில் நிறைவேற்றுவதில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படக்கூடிய ஏதேனும் நடவடிக்கைகளுக்கு மேலதிகமானதாக அமையுமென்பதோடு, அவற்றிற்குப் பங்கம் விளைவிப்பதாக இருக்காது என்பதை அவதானித்தும்;

இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக புலனாய்வொன்றும் விசாரணையொன்றும் நடத்தப்பட்டு தகவல்கள் பெறப்பட வேண்டும் என்பதும் அத்தகைய விடயங்கள் தொடர்பில் இழைக்கப்பட்ட பிழையான செயல்கள், ஒழுங்கீனங்கள் அல்லது முறைகேடுகள் உண்மையானவை எனக் கண்டறியப்படுமிடத்து, அவற்றில் ஈடுபட்ட அல்லது அவற்றிற்குப் பொறுப்பாகவிருந்த நபர் அல்லது நபர்கள் இனங்காணப்பட வேண்டும் என்பதும் அவசியமானதென எனக்கு தென்படுவதாலும்;

அத்தகைய செயல்கள் எதிர்காலத்தில் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிசெய்வதற்கு ஏதேனும் நிவாரண அத்துடன்/அல்லது தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்குமுகமாக இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஒரு புலனாய்வையும் விசாரணையையும் நடத்துவது தேசிய நலனுக்கு உகந்ததென்ற கருத்தினை நான் கொண்டிருப்பதனாலும்;

இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகப் புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் அறிக்கையிடுவதற்கும் விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுவது அவசியமாகும் என்ற கருத்தினை நான் கொண்டிருப்பதனாலும்;

எனவே, தற்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான் தங்களுடைய விவேகம், ஆற்றல் மற்றும் விசுவாசம் ஆகியவற்றில் பெரும் உறுதியும் நம்பிக்கையும் வைத்து, திருத்தப்பட்டவாறான விசாரணை ஆணைக்குழு (அத்தியாயம் 393) சட்டத்தின் பிரிவு 2 இன் ஏற்பாடுகளுக்கு அமைய சொல்லப்பட்ட தங்களை:

1. மாண்புமிகு கே.ரி. சித்திரசிறி அவர்கள்
   ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி

2. திரு.சுஹத கம்லத் அவர்கள்
   ஓய்வுபெற்ற சொலிசிட்டர் ஜெனரால்

3. திரு.டி.எம்.குணசேகர அவர்கள்
   சிரேட்ட வங்கியாளர்

பின்வரும் விடயங்கள் தொடர்பில் புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் அறிக்கையிடுவதற்கும்:

(அ) இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள் விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் நிருவாகம், முகாமைத்துவம், பணிகள் மற்றும் அலுவல்களை நடத்துதல் ஆகியவற்றில் ஏதேனும் சட்ட மீறல்கள் இருந்துள்ளனவா;

(ஆ) இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதேனும் பிழையான செயல், முறைகேடு, ஒழுங்கீனம் அல்லது அத்தகைய நிருவாகம், முகாமைத்துவம், பணிகள் மற்றும் விடயங்களை நடத்துதல் ஆகியன தொடர்பில் உரிய சட்டத்தினால் நிறுவப்பட்ட நடைமுறைகளுக்கு இயைந்தொழுகாமை இடம்பெற்று அது அரசாங்கத்திற்கு அத்துடன்/அல்லது பொது மக்களுக்கு சேதம் அல்லது ஊறு ஏற்படுத்தியுள்ளதா;

(இ) இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதேனும் ஒப்பந்தக் கடப்பாடுகள் மோசடியாக அல்லது நேர்மையீனமாக அல்லது கவனயீனமாக செய்து கொள்ளப்பட்டு அல்லது நிறைவேற்றப்பட்டு அது அரசாங்கத்திற்கு அத்துடன்/ அல்லது பொது மக்களுக்கு சேதம் அல்லது ஊறு ஏற்படுத்தியுள்ளதா;

(ஈ) இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கான உரிய சட்டத்தினால் நிறுவப்பட்ட நடைமுறைகளுக்கு இயைந்தொழுகாமை அல்லது உதாசீனம் இருந்துள்ளதா;

(உ) இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள நடைமுறைகளுக்கான அத்தகைய இயைந்தொழுகாமை அல்லது உதாசீனம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் பொருத்தமற்ற அல்லது ஒழுங்கற்ற அல்லது பாரபட்சமான விற்பனைக்கு வழிவகுத்துள்ளதா;

(ஊ) பொதுமக்களின் நன்மைக்காக அதிகூடிய விலையை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துமுகமாக இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது அடங்கலாக சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா;

(எ) இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு அத்துடன்/அல்லது பொதுமக்களுக்கு அத்தகைய சேதம் அல்லது ஊறு ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்த சட்டவிரோதச் செயல், செய்யத் தவறுதல் அல்லது நடத்தையில் ஈடுபட்ட ஆள் அல்லது ஆட்கள்;

(ஏ) இதற்கான சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அதிகார துஷ்பிரயோகம் அல்லது அதிகாரத்தைத் தவறாகப் பிரயோகித்தல், செல்வாக்கு, தலையீடு, மோசடி, முறைகேடு, உறவினர் சார்புவாதம் அல்லது ஊழல் செயற்பாட்டுடன் தொடர்புபட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யத் தவறியமை ஆகியன எழுந்துள்ளனவா;

அத்துடன், இக்கட்டளையின் நியதிகளுக்கமைய விசாரணை செய்யப்பட்டு புலனாய்வு செய்யப்பட்ட, இதற்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பரிந்துரைகளை மேற்கொள்வதற்கும் எனது ஆணையாளராக இத்தால் நியமிக்கின்றேன்;

அத்துடன், மேற்சொல்லப்பட்ட ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு கே.ரி. சித்திரசிறி ஆகிய தங்களை இவ் ஆணைக்குழுவின் தலைவராக நான் இத்தால் நியமிக்கின்றேன்.

அத்தகைய விசாரணை நடத்துவதற்கும், மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தேவையானதெனத் தென்படும் அத்தகைய அனைத்து விசாரணைகளையும் மேற்கொள்வதற்கும் தங்களுக்கு இத்தால் நான் அனுமதியளித்து அதிகாரமளிப்பதோடு, இக்கட்டளை விடுக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) மாதங்களுக்குள் உங்களுடைய புலனாய்வுகளினதும் விசாரணைகளினதும் கண்டறிதல்களையும், உங்களது விதப்புரைகளையும் குறிப்பிட்டு அது தொடர்பான அறிக்கைகளை அல்லது இடைக்கால அறிக்கைகளை உங்களது கையெழுத்தோடு எனக்கு அனுப்பி வைக்குமாறும் வேண்டுகிறேன்.

நீங்கள் உங்கள் தற்றுணிபில் தீர்மானிக்கக் கூடிய மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பிலான ஏதேனும் விசாரணையின் அத்தகைய பகுதிகளை பகிரங்கமாக நடத்தாமலிருக்கலாம்.

உங்களுடைய விசாரணைகள் மற்றும் புலனாய்வு நோக்கத்திற்காக உதவியை அல்லது தகவல்களை நீங்கள் கோருகின்ற சகல அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய நபர்கள் ஆகியோரை அத்தகைய உதவிகள் அனைத்தையும் வழங்குமாறும், அது தொடர்பான தகவல்களை உரியவாறு வழங்குமாறும் நான் இத்தால் வேண்டுகிறேன்.

மேற்குறிப்பிட்ட விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 14 இன் ஏற்பாடுகள் இவ் ஆணைக்குழுவிற்குப் பொருந்துதல் வேண்டும் என்று நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலட்சினையின் கீழ் இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதி கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பீ. பி. ஜயசுந்தர,
சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை**

1. இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படுவதும், இலங்கை மத்திய வங்கியின் தலையீட்டிற்கும் ETI யின் வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தித் தீர்ப்பதற்காக ETI யின் சொத்துக்களை விற்பனை செய்வதற்கும் இட்டுச் சென்ற பாரதூரமான நிதிப்பிரச்சினைகளை எதிர்நோக்கியதுமான ஒரு நிதிக் கம்பனியான ETI பினான்ஸ் லிமிட்டெட்டோடு (ETI) தொடர்புபட்ட பிழையான செயல், ஒழுங்கீனங்கள், முறைகேடுகள். இச்சொத்துக்களுள் சுவர்ண மஹால் பினான்சியல் சேர்விசஸ் பீஎல்சி, அதன் துணைக்கம்பனிகளுடன் EAP ஒலிபரப்பு கம்பனி லிமிட்டெட்; EAP பிலிம்ஸ் மற்றும் தியேட்டேர்ஸ் லிமிட்டெட் (மற்றும் அதன் துணைக்கம்பனிகள்) ; ஹொட்டேல் சஃப்யர்ஸ் பிறைவேட் லிமிட்டெட் ; சுவர்ண மஹால் யுவலர்ஸ் லிமிட்டெட் ; மற்றும் ETI பினான்ஸ் பீஎல்சி க்குச் சொந்தமான வேறு அசையாச் சொத்துக்கள்.

2. மேற்காணும் நிறுவனங்கள் புளூ சம்மிற் கெப்பிற்றல், மனேஜ்மென்ற் பிறைவேட் லிமிட்டெட் மற்றும் பென் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் ஆகியன அடங்கிய ஒரு குழுமத்திற்கு வெளிநாட்டவர்களினால் ஊடக நிறுவனங்கள் சொந்தமாக வைத்திருப்பது தொடர்பான இலங்கையின் சட்டங்களின் கீழான கட்டுப்பாடுகளை மீறி விற்பனை செய்யப்பட்டமை.

3. ETI இன் சொத்துக்கள் வெளிநாட்டவர்களால் அசையாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதைத் தடுக்கும் இலங்கையின் சட்டங்களை மீறி சொல்லப்பட்ட தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டமை.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.